4. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின்(3)-வது உட்பிரிவின்படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியம் ஒன்றை திரு. எம். சுரேந்திரன் அவர்கள் மாண்புமிகு சுகாதார – அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(அ) மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீரினால் அண்மையிலுள்ள கிணற்று நீர் பாதிக்கப்படுதல்.

திரு. எம். சுரேந்திரன்.— தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார–அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மேட்டூர் ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் அருகாமையிலுள்ள கிராமங்களின் கிணறுகளில் தண்ணீர் கெட்டும் குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசியம் பற்றி"

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையும் இரசாயன-பிளாஸ்டிக் தொழிற்சாலையும் வெளியிடும் கழிவுநீர் புதுசாம்பள்ளியில் உள்ள கால்வாய்களின் நீருடன் கலப்பதால் அண்டையிலுள்ள குடிநீர்க் கிணறுகளிலும் பாசனக் கிணறுகளிலும் நீரின் தூய்மை கெட்டு விட்டது என்று அரசாங்கத்துக்கு முறையீடுகள் வந்துள்ளன. (தொழில் துப்புரவு) பொது சுகாதார உதவி இயக்குனரும், தொழிற்சாலைகளின் மேற்பார்வையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முதுநிலை அதிகாரியும் இது குறித்து ஆய்வு செய்தனர். இத் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீரை அகற்றுவதற்கான முறைகள் குறித்து அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். தொழிற்சாலைகளின் கழிவுநீர் மேற்சொன்ன கால்வாயுடன் சேருவதை நிறுத்தி விட்டதாகவும், மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலையின் கழிவு நீர் சரிவரத் தூய்மைப் படுத்தப்பட்ட பிறகு, குழாய் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் விடப்படுவதாகவும், இரசாயன-பிளாஸ்டிக் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் தூய்மைப் படுத்தப்பட்ட பிறகு அகற்றப்படுவதாகவும் அத் தொழிற்சாலைகள் அறிவித்துள்ளன. கழிவு நீரை அகற்றுவதற்கென இரண்டாவது தொழிற்சாலை குழாய்களை அமைத்து வருகிறது. 1969 ஜூன் இறுதிக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலையை விரைவாக முடிக்க வேண்டுமென்றும், கழிவுநீர் அகற்றப்படுவதற்கு முன்பு நன்கு தூய்மைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசு வற்புறுத்திக் கூறியுள்ளது.

மேற்படி இரண்டு தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் தற்போது புதுசம்பள்ளி கிராமத்திற்கு நாளொன்றுக்கு 20,000 காலன் நீரை வழங்கி வருகின்றனர். அத்துடன், மேட்டூர் இரசாயனத் தொழிற்சாலை அதன் அருகில் நிறுவப்பட்ட மூன்று குழாய்கள் மூலம் கருமலைக்கூடல் கிராம மக்களுக்கு நீர் வழங்குகின்றது. அடுத்து ஜூலைத் திங்களிலிருந்து அது வழங்கும் நீரின் மொத்த அளவு 40,000 காலனாக அதிகரிக்கும். நாளொன்றுக்கு 60,000 காலன் நீர் வழங்கவேண்டியதன் அவசியத்தைத் தொழிற்சாலைகளிடம் அரசு வலியுறுத்தியுள்ளது. 1969 மார்ச்சு 3-ம் நாளன்று நடந்த ஒரு கூட்டத்தில், மேற்படி இரண்டுத் தொழிற்சாலைகளின் முதுநிலைப் பிரதிநிதிகள் 1969 ஜூலைத் திங்களுக்குள் நாளொன்றுக்கு 60,000 காலன் நீரை வழங்குவது குறித்து இதைமேலும் ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர்.

அத் தொழிற்சாலைகளை மீண்டும் பார்வையிட்டு, அவற்றிலிருந்து வரும் கழிவு நீரைத் தக்கவாறு தூய்மைப்படுத்துவது குறித்து மேற்கொண்டு அறிக்கை ஒன்றை அனுப்புமாறு சுகாதாரப் பணிகள் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில் நுட்ப அதிகாரி ஒருவருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இந்த இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வரும் நீரினால் அங்கே குடிதண்ணீர்க் கிணறுகளும், விவசாயக் கிணறுகளும் கெட்டுப் போய், குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் வழியில்லாமல் இரண்டு வருஷங்களாக இருக்கிறது. இப்பொழுது அமைச்சரவர்கள் அறிவித்திருக்கின்ற கருத்துப்படி 60,000 காலன் தண்ணீர் கொடுப்பதைக் குறித்து ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குடிதண்ணீர் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கையாக அங்கே பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டிலே 1,12,000 ரூபாயில் திட்டம் இருப்பதாக அறிகிறேன். அம்மாதிரியான காரியத்தைச் செய்ய பணத்தையாவது செலவழித்து உடனடியாகக் குடிதண்ணீர் கொடுக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பது, இந்த இரண்டு தொழிற்சாலைகளும் வெளியிடும் கழிவுநீர், கால்வாய்களின் நீருடன் கலப்பதால் அண்டையிலுள்ள குடிநீர்க் கிணறுகளிலும், பாசனக் கிணறுகளிலும் நீரின் தூய்மை கெட்டுவிட்டது என்ற, காரணமாக இருக்கிறது, அதற்காகத்தான் கவன ஈர்ப்பு. மேட்டூர் குடிதண்ணீர் சம்பந்தமாக 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பது தனிப் பிரச்சினை. கழிவுநீர், கால்வாய் மூலம் வந்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது கவன ஈர்ப்புத் தீர்மானம். அதை நீக்க, தண்ணீரைத் தூய்மைப் படுத்தி அகற்றுவதற்காக எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றி அறிக்கையில் விளக்கமாகக் கூறினேன். அருகேயுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை வேறு ; கழிவுநீர்ப் பிரச்சினை வேறு.

திரு. எம். சுரேந்திரன் : 'குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்யவேண்டிய அவசியம் பற்றி அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்' என்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, "தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் அருகாமையிலுள்ள கிராமங்களின் கிணறுகளில் தண்ணீர் கெட்டும், குடிதண்ணீர் இல்லாமலும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால்" என்றுதான் கூறியிருக்கிறார்கள். கழிவுநீரினால் குடிதண்ணீர் கெட்டும், விவசாயம் பாதிக்கப்பட்டும் உள்ளதால் தண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றித்தான் கூறினார்கள். கழிவுநீரைச் சுத்தப்படுத்தி அனுப்ப வேண்டும், பரிசுத்தமாகச்

செய்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது கழிவு நீராகவே வந்துவிடக்கூடாது, சுத்தப்படுத்தி அனுப்பவேண்டுமென்றுதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை திரு ஜெ. பெள்ளி கவுடர், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. எம். பூபதி ஆகியோர் மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

(ஆ) குன்னூர், உதகை ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும்

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: தலைவரவர்களே குன்னூர், உதகமண்டலம் நகரங்களில் குடிநீர்க் கஷ்டம் இருந்து வருகிறது. இந்த நிலையில் கோடைகாலம் நெருங்குகின்ற காரணத்தாலும் மேலும் அங்கு வருகின்ற மக்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிடம் தட்டச்சு செய்து கொடுத்திருக்கிறார்கள் பாருங்கள், அதைப் படிக்க வேண்டும்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ்- கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்படவிருக்கும் இடர்ப்பாடுபற்றி"

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர்வர்களே, சட்டப் பேரவையின 41-வது விதியின கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி".

திரு. எம். பூபதி: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"நீலகிரி மாவட்டம், குன்னூர், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் குடிநீர் கிடைக்காமையால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடு பற்றி"

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் நகராட்சியில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் செயலில் உள்ளது. 1957 ஆகஸ்டில் நகராட்சிக்கு நீர் வசதிப் பெருக்கத் திட்டம் ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. அத் திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சிக்குத் தற்போது நீர் வழங்கும் வாயில்கள் அங்குள்ள மக்களுக்கும், சிருலாப் பயணிகளுக்கும் ஆண்டு முழுவதும் தேவையான நீர்வழங்கப் போதுமானதாக இல்லை. நகராட்சிக்கு நீர் வழங்குவதை நிலையாக உயர்த்த பார்சன்ஸ் பள்ளத்தாக்கு நீர்த் தேக்கத்திலிருந்து ரூ. 33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டது. உதகமண்டலம் நகராட்சி மன்றத்தின் தற்போதைய நிதி நிலைமை, புதிய திட்டத்திற்கு நிதி வழங்கப் போதுமானதாக இல்லை. தனது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் நகராட்சி மன்றம் ஒப்புக்